## வரையறுக்கப்பட்ட பீஓசீ மனேஜ்மென்ட் & சப்போட் சேவிசஸ் (தனியார்) கம்பனி - 2016

வரையறுக்கப்பட்ட பீஓசீ மனேஜ்மென்ட் & சப்போட் சேவிசஸ் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது.

அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. **நிதிக்கூற்றுக்கள்**
---------------------------

2.1 **அபிப்பிராயம்**
---------------------

எனது அபிப்பிராயத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.1.1 **ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**
---------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**
-----------------------------------------------------

2.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**
--------------------------------------

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வரிப்பொறுப்பு ரூபா 162,756 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், வரிப் பொறுப்பு ரூபா 282,555 ஆகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய வரி ரூபா 119,799 இனால் மிகைத்து காட்டப்பட்டிருந்தது.

2.2.2 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை.**
---------------------------------------------------------------

நேரடி உறுதிப்படுத்தல்கள் கிடைக்காமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 423,542 தொகையாகக் காட்டப்பட்டிருந்த தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகள், பெறவேண்டிய ஊக்குவிப்புப் படிகள் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் கணக்காய்வில் சரிபார்க்கமுடியாதிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 487,615 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கு ரூபா 581,271 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றினை கம்பனி உழைத்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 93,656 முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் புதிய முதலீடுகள் மீதான வட்டி வருமானம் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மொத்த செலவினங்களில், ரூபா 60,000 தொகையொன்று அல்லது 67 சதவீதம் பதிவுக்கான தீர்வையாக ஏற்பட்டிருந்த அதேவேளை ரூபா 20,414 தொகையொன்று அல்லது 23 சதவீதம் கணக்காய்வு கட்டணமாக ஏற்பட்டிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

பிரதான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடாது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் மேலதிக நிதிகளை முதலிடுவதன் மூலம் கம்பனி அதனது முழுமையான செயற்பாட்டு வருமானத்தினை உழைத்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகள் காலப்பகுதியின் செயற்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு பின்னரான இலாப விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருடம் | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| செயற்பாட்டு வருமானம் | 670,830 | 512,825 | 508,885 | 678,674 | 494,847 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 418,551 | 351,083 | 341,801 | 471,437 | 440,235 |

#### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் அதற்கு முன்னைய 04 ஆண்டுகளினதும் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| இலாபத்தன்மை விகிதம் (சதவீதம்) | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.07 | 0.05 | 0.06 | 0.07 | 0.06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | | | | | |
| ----------------------------------------------------------------------- | | | | | |
| நடைமுறை விகிதம் | 25.6 | 23.4 | 23.1 | 12.7 | 21.4 |
| மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 0.96 | 0.96 | 0.96 | 0.92 | 0.95 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளின் போது கம்பனியால் உழைக்கப்பட்ட இலாபத்தை வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துடன் ஒப்பிடும் போது திருப்பதிகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

(ஆ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் ஏனையவை போன்ற குறுங்கால முதலீடுகளில் கம்பனியின் நிதியில் ரூபா 9.3 மில்லியன் தொகையொன்று அல்லது 98 சதவீதம் முதலிடப்பட்டிருந்தது. எனவே, கம்பனியால் உயர் திரவத்தன்மை நிலையொன்று காணப்படுகின்றதுடன், அது கம்பனியின் செயற்பாட்டு மூலதன முகாமைத்துவத்தில் மிகவும் பலவீனமொன்றினைக் காண்பிக்கின்றது.

(இ) ரூபா 9.9 மில்லியன் மொத்த சொத்துக்கள் பெறுமதியுடன் ஒப்பிடும் போது கம்பனியின் தேறிய நடைமுறைச் சொத்துக்கள் 96 சதவீதமாக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை வங்கியின் மனிதவள தேவைப்பாடுகளை எளிதாக்குவதன் பொருட்டு ஊழியர்களின் ஆட்சேர்ப்பு கம்பனியின் பிரதான வியாபார நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 2007 இல் இருந்து இவ் பிரதான செயற்பாட்டில் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் கூட மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2007 இலிருந்து அதன் பிரதான செயற்பாட்டை கம்பனி நிறுத்திக்கொண்ட போதிலும், முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது 2008 யூலை 07 இல், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அது மீள பதிவுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 யூலை 31 இல் நடாத்தப்பட்ட அதனது கூட்டத்தில் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை கம்பனியை முடிவுறுத்தும் தீர்மானத்தை அங்கீகரித்திருந்தனர்

(ஆ) நிர்வாக நோக்கத்திற்கு இலங்கை வங்கியால் நியமிக்கப்பட்ட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர்களினைத் தவிர மீளாய்வாண்டின் இறுதி வரை கம்பனியில் எவ்வித ஊழியர்களும் காணப்படவில்லை.

(இ) 2016 அரச பாதீட்டு முன்மொழிவுக்கமைய, ரூபா 60,000 தொகையொன்றை வருடாந்த பதிவு தீர்வையொன்றாக செலுத்துவதற்கு தனியார் கம்பனியொன்று பொறுப்படையவராவார். அதற்கமைய, 2016 யூன் இல் ரூபா 60,000 கம்பனி செலுத்தியிருந்ததுடன் கம்பனியின் மொத்த வருமானத்தில் அது 9 சதவீதமாகக் காணப்பட்டது. 2007 இல் இருந்து அதனது முதன்மை நோக்க செயற்பாடுகளில் கவனஞ்செலுத்தாது கம்பனி தொடர்ந்து செல்கின்றமை கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது.